தின கனி காலை நாளிதழ்

மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை

Call : 044-22772060 9443699066



admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்






| Vol: 03 | Issue: 234 | 4 Pages | 02.07.2026 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 234 | 4 பக்கங்கள் | 02.07.2026 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**முதலிலார்க் கூதிய மில்லை மதலையாஞ்**
**சார்பிலார்க் கில்லை நிலை**

**விளக்கம்:**
**முதல் இல்லாத வணிகர்க்கு அதனால் வரும் ஊதியம் இல்லை, அதுபோல் தம்மைத் தாங்கிக் காப்பாற்றும் துணை இல்லாதவர்க்கு நிலைபேறு இல்லை.**

## ஹார்முஸ் ஜலசந்தியில் தரை தட்டி நின்ற சரக்கு கப்பலால் பரபரப்பு



ஹார்முச், ஜூலை 2

ஹார்முச் ஜலசந்தியில் சரக்கு கப்பல் ஒன்று தரை தட்டி நின்றதால் மாலுமிகள் அதிர்ச்சி அடைந்தனர். இது தொடர்பாக ஈரான் அரசு தொலைக்காட்சி வெளியிட்ட செய்தியில் கூறியிருப்பதாவது; ஈரான் அரசு கூறிய வழித்தடத்தை பின்பற்றாமல் சென்ற வெளிநாட்டு சரக்கு கப்பல் ஒன்று தரைதட்டி சிக்கியது.பாதிக்கப்பட்ட கப்பல் வெளிநாட்டைச் சேர்ந்த கண்டெய்னர் சரக்கு கப்பல் என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், அது எந்த நாட்டைச் சேர்ந்தது என்பது உள்ளிட்ட விவரங்கள் உடனடியாக வெளியிடப்படவில்லை. ஹார்முஸ் ஜலசந்தியில் பயணிக்கும் அனைத்து கப்பல்களும், ஈரானின் புரட்சிகரகாவல்படை வழங்கும் வழிகாட்டுதல்கள் மற்றும் அறிவுறுத்தல்களை கட்டாயம் பின்பற்ற வேண்டும் என்றும் அந்த செய்தியில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஈரான் அமெரிக்கா இடையே ஏற்பட்ட இடைக்கால ஒப்பந்தத்தின்படி, ஹார்முஸ் ஜலசந்தி வழியாக கப்பல்கள் தடையின்றி அனுமதிக்கப்பட வேண்டும் என்று அமெரிக்கா கூறி வருகிறது. ஆனால், அங்கு இடையூறை ஈரான் ஏற்படுத்துவதாகவும் குற்றச்சாட்டு எழுந்து வருகிறது. இதனால், அந்த ஜலசந்தியை ஒட்டிய பகுதியில் பதற்றம் மீண்டும் அதிகரித்துள்ளது.

இதற்கிடையில், கடந்த வார இறுதியில் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் பரபரப்பான சூழல் நிலவிய நிலையில், ஹார்முச் ஜலசந்திக்கு மாற்றாக ஓமன் கடலோரப் பகுதி வழியாக புதிய கப்பல் போக்குவரத்து பாதையை உருவாக்கும் முயற்சியில் ஓமன் அரசும், ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு அமைப்பும் ஈடுபட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## ஈரான் அதிபருடன் பிரதமர் மோடி தொலைபேசியில் பேச்சு



தெஹ்ரான், ஜூலை 2

ஈரான் அதிபருடன் தொலைபேசியில் பேசிய பிரதமர் மோடி, ஹார்முஸ் ஜலசந்தியில் தடையற்ற போக்குவரத்து மிகவும் முக்கியமானது என்று வலியுறுத்தியுள்ளார்.

ஈரான் மீது கடந்த பிப்ரவரி 28ந்தேதி அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ராணுவம் திடீரென போர் தொடுத்தன. இதில் முதல் நாளிலேயே ஈரான் உச்சபட்சத்தலைவர் அயதுல்லா அலி காமேனி கொல்லப்பட்டார். இந்த தாக்குதலுக்கு பதிலடியாக வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க படைத்தளங்கள் மீதும், இஸ்ரேல் மீதும் ஈரான் தாக்குதல் நடத்தியது. மேலும் ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.

இதற்கிடையில்அமெரிக்காவும், ஈரானும்கடந்தஜூன்17ந்தேதி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. அதில் ஹார்முஸ் ஜலசந்தியில் ஈரான் விதித்திருந்த கட்டுப்பாடுகளை நீக்குவது, அப்பகுதியில் அமெரிக்கா ராணுவ நடவடிக்கைகளை குறைப்பது, பொருளாதார தடைகளில் இருந்து நிவாரணம் அளிப்பது, ஈரானின் அணுசக்தித் திட்டம் தொடர்பான விவகாரத்திற்குத் தீர்வு காண 60 நாள் காலக்கெடு வழங்குவது உள்ளிட்ட ஒப்பந்தங்கள் இடம்பெற்றிருந்தன.

ஆனால், இந்த ஒப்பந்தம் கையெழுத்தான பிறகும், ஹார்முஸ் ஜலசந்தியில் வர்த்தகக் கப்பல்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியதாக கூறி, அமெரிக்கப் படைகள் ஈரான் ராணுவ படைத்தளங்கள் மீது தாக்குதல் நடத்தியது. இதற்குப் பதிலடியாக, ஈரானின் புரட்சிகரப் பாதுகாப்புப் படை, பஹ்ரைன் மற்றும் குவைத்தில் உள்ள அமெரிக்க ராணுவத் தளங்களைத் தாக்கியது.

இந்ததாக்குதல்கள்தொடர்ந்தால்மேலும்ராணுவநடவடிக்கைஎடுக்கப்படும் எனஅமெரிக்கஅதிபர்டொனால்ட்டிரம்ப்எச்சரித்தநிலையில், அமெரிக்காவின் எந்தவொரு அடுத்தகட்ட நடவடிக்கையும் பேச்சுவார்த்தைகளை முழுமையாக நிறுத்திவிடும் என்று ஈரானிய அதிகாரிகள் தெரிவித்தனர். அடுத்தடுத்து நிகழ்ந்து வரும் இந்த தாக்குதல்களால் மத்திய கிழக்கில் பதற்றமான சூழல் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இந்த சூழலில், போரின் முதல் நாளில் கொல்லப்பட்ட ஈரான் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனியின் இறுதிச் சடங்கு வரும் 5ந்தேதி முதல் 9ந்தேதி வரை நடைபெற உள்ளது. இதில் கலந்து கொள்ள இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியான் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்நிலையில், பிரதமர் மோடி ஈரான் அதிபரை தொலைபேசியில் தொடர்பு கொண்டுபேசியுள்ளார்.இதுதொடர்பாக'எக்ஸ்'தளத்தில்அவர்வெளியிட்டுள்ள பதிவில், “மேற்கு ஆசியாவில் ஏற்பட்டுள்ள சமீபத்திய நிகழ்வுகள் குறித்து ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியானுடன் உரையாடினேன். பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை வரவேற்றதுடன், தொடர்ச்சியான முயற்சிகள் மத்திய கிழக்கு பகுதியில் நீடித்த அமைதியை ஏற்படுத்தும் என்று நம்பிக்கை தெரிவித்தேன். ஹார்முஸ் ஜலசந்தியில் தடையற்ற கப்பல் போக்குவரத்து இந்தியாவிற்கும், உலகத்திற்கும் முக்கியமானது என்பதை மீண்டும் வலியுறுத்தினேன்” என்று பதிவிட்டுள்ளார்.

## அபுதாபி- புஜைரா இடையே முதல் பயணிகள் ரெயில் சேவை: பொதுமக்கள் வரவேற்பு

அபுதாபி புஜைரா இடையே தொடங்கிய முதல் பயணிகள் ரெயில் சேவை பொதுமக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

மேற்காசிய நாடுகளில் ஒன்றான ஐக்கிய அரபு எமிரேட்சில், அபுதாபி, துபாய், ஷார்ஜா, அஜ்மான், உம் அல் குவைன், ராஸ் அல் கைமா, புஜைரா ஆகிய 7 நகரங்கள் உள்ளன. வளர்ந்த நாடுகள் வரிசையில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இருந்தாலும் இதுவரை முக்கிய நகரங்களை இணைக்கும் வகையில் பயணிகள் ரெயில் போக்குவரத்து இல்லாமல் இருந்தது. மெட்ரோ, டிராம் போன்ற போக்குவரத்து சேவைகள் உள்ளூருக்குள் மட்டுமே இருந்தது.

இந்த நிலையில், 7 நகரங்களை இணைக்கும் வகையில், எத்தியாட் என்ற ரெயில் திட்டம் 2009ம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. இந்த திட்டத்தின்கீழ் 1,200 கி.மீ. தூரத்துக்கு ரெயில் பாதை அமைக்கப்பட்டு, தற்போது வரை சரக்கு ரெயில்கள் மட்டுமே இயக்கப்பட்டு வந்தன. முதல் பயணிகள் ரெயில் சேவை நேற்று (செவ்வாய்கிழமை) தொடங்கியது.

புஜைரா அபுதாபி இடையே இயக்கப்படும் இந்த ரெயில் துபாய், ஷார்ஜா வழியாக செல்கிறது. மணிக்கு 200 கி.மீ. வேகத்தில் செல்லும் இந்த பயணிகள் ரெயிலில், அதிநவீன இருக்கைகள், ஏ.சி., வைபை வசதி, உலகத்தரம் வாய்ந்த உணவுகள் வழங்கப்படுகின்றன. குறிப்பிட்ட இரு நகரங்களுக்கு இடையே காரில் செல்ல அதிக நேரம் ஆன நிலையில், தற்போது ரெயிலில் சில மணி நேரங்களிலேயே சென்றுவிட முடியும் என்பதால், பொதுமக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

# தமிழக அரசியலில் உச்சக்கட்ட பரபரப்பு: த.வெ.க. அரசை கவிழ்க்க தி.மு.க. குதிரை பேரம் நடத்தியதா? அதிர்ச்சி தகவல்



சென்னை, ஜூலை 2

தமிழக அரசியலில் உச்சக்கட்ட பரபரப்பாக, த.வெ.க. அரசை கவிழ்க்க தி.மு.க. குதிரை பேரம் நடத்தியதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்தில் நடந்து முடிந்த 17 வது சட்டசபை தேர்தலில் எந்தக் கட்சிக்கும் மெஜாரிட்டி கிடைக்க வில்லை. அரசியலுக்கு புது வரவான த.வெ.க. 107 இடங்களில் வெற்றி பெற்றிருந்த நிலையில், தி.மு.க. கூட்டணியில் அங்கம் வகித்த காங்கிரஸ் (5), மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு (2), இந்திய கம்யூனிஸ்டு(2),விடுதலைசிறுத்தைகள் கட்சி (2), இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (2) ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் கூட்டணி ஆட்சி அமைத்துள்ளது.

ஆனால், இடைப்பட்ட நேரத்தில், தமிழகத்தில் எதிரும்.. புதிருமாக இருக்கும் இருபெரும் திராவிட கட்சிகளான தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் கூட்டணி அமைத்து ஆட்சி அமைக்க முயற்சித்ததாகவும் பரபரப்பு தகவல்கள் வெளியாகின.

அதற்குள், த.வெ.க.வும் கூட்டணி ஆட்சி அமைத்ததுடன், ஆட்சியிலும் காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிகளுக்கு பங்கு கொடுத்தது. அத்துடன், தி.மு.க. அ.தி.மு.க. கூட்டணி பரபரப்பும் முடிவுக்கு வந்தது.

அதன்பின்னர், தமிழக சட்டசபையிலும் த.வெ.க. அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பில் அ.தி.மு.க. உறுப்பினர்கள் 25 பேர் ஆதரவாக வாக்களித்ததும் சர்ச்சை ஆனது. அந்த நேரத்தில் கருத்து தெரிவித்த அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம், தி.மு.க. அ.தி.மு.க. ஆட்சி அமைக்க கூட்டணி பேசியது உண்மை என்று அதிரடியாக குற்றம்சாட்டினார். தற்போது, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் காதர் மொய்தீனும் அதை ஆமோதித்துள்ளார். இது தொடர்பாக, தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினே தன்னுடன் போனில் பேசினார் என்றும் பரபரப்பு தகவலை வெளியிட்டார்.

இப்படி, தமிழக அரசியலில் தினம் ஒரு பரபரப்பு தகவலாக வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில், இன்று உச்சகட்ட பரபரப்பாக, த.வெ.க. ஆட்சியை கவிழ்க்க அக்கட்சி எம்.எல்.ஏ.க்களை தி.மு.க. விலைக்கு வாங்க முயன்றதாக அதிர்ச்சி தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஊத்தங்கரை தொகுதி த.வெ.க. எம்.எல்.ஏ. இளையராஜாவிடம் தி.மு.க. முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியின் ஆதரவாளரான திருநாவுக்கரசர் என்பவர் போனில் தொடர்பு கொண்டு, தமிழக சட்டசபையில் சபாநாயகருக்கு எதிராக தீர்மானம் கொண்டுவர உள்ளதாகவும், ஆளுங்கட்சி உறுப்பினராக இருந்தாலும் அத்தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பின்போது தங்களுக்கு சாதகமாக நடந்துகொள்ள வேண்டும் என்றும், அதற்கு சன்மானமாக ரூ.35 கோடி வரை தருவதாகவும் ஆசை வார்த்தை கூறியுள்ளார். இது தொடர்பாக, த.வெ.க. எம்.எல்.ஏ. இளையராஜா போலீசில் புகார் அளித்துள்ளார். இதேபோல், மேலும் 14 த.வெ.க. எம்.எல்.ஏ.க்களிடம் பேசப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

த.வெ.க. அரசை கவிழ்க்க தி.மு.க. முயற்சி மேற்கொண்டது உண்மைதானா? என்று போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள். இது ஒரு பக்கம் இருக்க, கடந்த சில தினங்களுக்கு முன்பு கட்சி நிகழ்ச்சி ஒன்றில் பேசிய தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், "தமிழகத்தில் தேர்தல் எப்போது வேண்டுமானாலும் வரலாம். 100 சதவீதம் தயாராக இருங்கள்" என்று நிர்வாகிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்த நிலையில்தான், கடந்த மாதம் 29ந் தேதி சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் கவர்னர் அர்லேக்கரை கிண்டி மக்கள் மாளிகையில் சென்று சந்தித்தார். அவருடன் அமைச்சர்கள் நிர்மல்குமார், விஸ்வநாதன் ஆகியோர் சென்றிருந்தனர்.

ஆனால், இந்த திடீர் சந்திப்பு ஏன் நடந்தது? என்று அப்போது எதுவும் தகவல்கள் வெளியாக வில்லை.

அதற்கான காரணம் இப்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. சட்டசபையில் சபாநாயகருக்கு எதிராக தீர்மானம் கொண்டுவர இருப்பதையும், த.வெ.க. எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்க முயற்சி நடப்பதையும் தெரிந்து கொண்டுதான் சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர், அமைச்சர்கள் நிர்மல் குமார், விஸ்வநாதன் ஆகியோர் கவர்னரை நேரில் சந்தித்து புகார் அளித்ததாக கூறப்படுகிறது.

ஆனால், கவர்னர் அர்லேக்கரோ, சட்ட ரீதியாக எந்த உதவியையும் செய்ய நான் தயாராக இருக்கிறேன் என்றும், மாற்று வழியில் உதவி செய்ய முடியாது என்றும் கூறிவிட்டதாக தெரிகிறது.

அதன் அடிப்படையிலேயே, த.வெ.க. எம்.எல்.ஏ.க்களிடம் குதிரை பேரம் நடந்தது தொடர்பாக போலீசில் புகார் அளிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. இனி, தமிழக அரசியலில் அடுத்தக்கட்ட பரபரப்பு என்ன நடக்கிறது? என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

## திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் சொல்வது போல தவெக ஆட்சி கவிழாது: தவெக அரசுக்கான இடதுசாரிகளின் ஆதரவு



திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் சொல்வது போல தவெக ஆட்சி கவிழாது எனவும், தவெக அரசுக்கான இடதுசாரிகளின் ஆதரவு தொடரும் இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலாளர்கள் கூட்டாக தெரிவித்துள்ளனர்.

தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் தலைமையில் தவெக கூட்டணிக் கட்சித் தலைவர்களின் ஆலோசனைக் கூட்டம் மாமல்லபுரத்தில் உள்ள தனியார் விடுதியில் இன்று மாலை நடைபெற உள்ளது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்கப்போவதில்லை என அறிவித்துள்ள இடதுசாரிகள் இன்று காலை முதலமைச்சர் ஜோசப் விஜயை தலைமைச் செயலகத்தில் சந்தித்து பேசினர். அதன் தொடர்ச்சியாக செய்தியாளர்களை சந்தித்து பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் சண்முகம் மற்றும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் வீரபாண்டியன், தவெக ஆட்சியிலும் கூட்டணியிலும் அங்கம் வகிக்கவில்லை என்பதால் நாங்கள் இன்று மாலை நடைபெறும் கூட்டத்தில் பங்கேற்கவில்லை என தெரிவித்தனர். மேலும் காவிரி உள்ளிட்ட தீர்மானங்கள் கொண்டு வருவதற்கு முன்பாக அனைத்துக் கட்சி கூட்டத்தை கூட்டி ஒருமித்த கருத்தை எடுத்த பின்பு தான் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என முதலமைச்சரிடம் கோரிக்கை வைத்ததாகவும் தெரிவித்தனர். மேலும் தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையில் மக்கள் எதிர்பார்க்கும் அறிவிப்புகள் இடம்பெற வேண்டும் எனவும், தமிழ்நாடு அரசியலில் உள்ள ஒப்பந்த பணியாளர் முறையை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் எனவும் முதலமைச்சரிடம் கோரிக்கை விடுத்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.



திருவாரூர் மாவட்ட ஆட்சியரக அலுவலக தரைதளத்திலுள்ள மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 5 மாற்றுத்திறனாளி நபர்களுக்கு ரூ.7 லட்சத்து 98 ஆயிரத்து 600 மதிப்பிலான நவீன செயற்கை அவையங்களை திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ.மோகனச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

## தமிழ்நாடு புதுச்சேரி பார் கவுன்சில தேர்தலில் முன்னாள் சிறப்பு அரசு வழக்கறிஞர் இ பாலமுருகன் அமோக வெற்றி



ராயபுரம், ஜூலை.2,

பார் கவுன்சில் தேர்தலில், முன்னாள் சிறப்பு அரசு வழக்கறிஞர் இ பால முருகன் அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார். தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சிலில்மொத்தம்25உறுப்பினர்பதவிகள் உள்ளன. இதில், 23 உறுப்பினர்கள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக் கப்படுவார்கள், மற்றும் 2 உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள். அந்த வகையில், இந்த 23 உறுப்பினர் பதவிகளுக்கு கடந்த மார்ச் 30ந்தேதி தேர்தல் நடந்தது முடிந்தது. இந்த தேர்தலில் 143 வழக்கறிஞர்கள் போட்டியிட்டனர். இதில் தமிழ்நாடு முழுவதும் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு வருகின்றன. இதில், நாமக்கல்லைச் சேர்ந்த வழக்கறிஞர் ஒருவர் 3 ஆயிரத்து 899வாக்குகள் பெற்று வெற்றிப் பெற்றுள்ளார். அவரை தொடர்ந்து, முன்னாள் பார் கவுன்சில் தலைவர் இரண்டாவதாக வெற்றி பெற்றுள்ளார் அதைத்தொடர்ந்து மூன்றாவதாக முதல் முறை போட்டியிட்ட சென்னையைச் சேர்ந்த முன்னாள் அரசு சிறப்பு வழக்கறிஞர் இ பாலமுருகன் 3 ஆயிரத்து 1 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றதாக தற்போது தேர்தல் அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

## மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் இயற்கையின் அற்புத படைப்புகளால் ஈர்க்கப்பட்ட ‘நுவா’ நேச்சுரல் டைமண்ட் நகைத் தொகுப்பை அறிமுகம்




மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் தனது புதிய நேச்சுரல் டைமண்ட் நகைத்தொகுப்பான ‘நுவா’ வை அறிமுகப்படுத்தியுள்ளது. இயற்கையில் காணப்படும் நுணுக்கமான வடிவங்கள், அமைப்புகள் மற்றும் அழகிய விவரங்களிலிருந்து ஈர்க்கப்பட்ட இந்தத் தொகுப்பு, இயற்கையின் அற்புதங்களை நவீன ஆடம்பரத்துடன் இணைக்கும் ஒரு சிறப்பான முயற்சியாக உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த அறிமுகம் குறித்து கருத்து தெரிவித்த மலபார் குழுமத்தின் தலைவர் திரு. எம்.பி.அகமது கூறியதாவது: “இந்தத் தொகுப்பின் மையக் கருத்து, நம்மைச் சுற்றியுள்ள உலகை அமைதியாக வடிவமைக்கும் இயற்கையின் நுணுக்கமான அமைப்புகள், வடிவங்கள் மற்றும் விவரங்களின் அழகை கொண்டாடுவதாகும். நுவா மூலம் அந்த இயற்கை அழகை நவீன நேச்சுரல் டயமண்ட் நகைத் தொகுப்பாக மாற்ற விரும்பினோம்.

அது நேர்த்தியானதோடு பல்வேறு நிகழ்வுகளுக்கும் பொருத்தமானதாகவும், இன்றைய பெண்களின் வாழ்க்கை முறைக்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும் என்பதே எங்களின் நோக்கம். ஒவ்வொரு நகையும் சிறந்த கைவினைத்திறனையும் இயல்பான செழுமையையும் சமநிலைப்படுத்தி, தலைமுறைகளைத் தாண்டி ரசிக்கப்படக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்றார்

# பாலியல் வன்கொடுமைகளை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டும் அ.தி.மு.க. மகளிரணி கூட்டத்தில் தீர்மானம்



சென்னை, ஜூலை 2

மின்வெட்டை தடுக்க நடவடிக்கை உள்ளிட்ட 6 தீர்மானங்கள் அ.தி.மு.க. மகளிரணி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

அ.தி.மு.க. மகளிர் அணியின் ஆலோசனை கூட்டம் சென்னை ராயப்பேட்டையில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் இன்று நடைபெற்றது. கூட்டத்திற்கு கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமை தாங்கினார். அவைத் தலைவர் தமிழ்மகன் உசேன், துணைப் பொதுச் செயலாளர் கே.பி.முனுசாமி, பொருளாளர் திண்டுக்கல் சீனிவாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்திற்கான ஏற்பாடுகளை மகளிரணி செயலாளர் பா. வளர்மதி செய்திருந்தார்.

அ.தி.மு.க. மகளிரணி ஆலோசனை கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

★ ஜெயலலிதா வழியில், அ.தி.மு.க.வுக்கு தற்போது ஏற்பட்டுள்ள இந்த சோதனையில் இருந்து விரைவில் மீண்டு வருவதற்கான ஆக்கப்பூர்வ பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டு, எடப்பாடி பழனிசாமியின் கட்டளைகளை ஏற்று, மகளிர் அணியினர் அனைவரும் இரவு, பகல் பாராமல் அயராது கட்சி பணியாற்றுவது என உறுதி ஏற்பு.

எத்தனை நூற்றாண்டுகள் வந்தாலும் அ.தி.மு.க. மக்களுக்காகவே இயங்கும் எடப்பாடி பழனிசாமி தலைமையில், என்றென்றும் கட்சிப் பணிகளிலும், மக்கள் பணிகளிலும் ஈடுபடுவது என மகளிர் அணி சபதமேற்கிறது. பாலியல் வன்கொடுமையை தடுக்க நடவடிக்கை

★ சட்டமன்ற பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் முதல், கட்சி நிர்வாகிகள் அனைவரும் ஆற்ற வேண்டிய தேர்தல் பணிகள் தொடர்பான வியூகங்களை வகுத்து கொடுத்ததோடு, கட்சி மற்றும் கூட்டணி கட்சிகளின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கு ஆதரவாக, தமிழ்நாடு முழுவதும் சூறாவளி தேர்தல் பிரச்சார சுற்றுப் பயணம் மேற்கொண்ட எடப்பாடி பழனிசாமியால், அ.தி.மு.க. 47 இடங்களிலும்; கூட்டணி கட்சிகள் 6 இடங்களிலும்; ஆக மொத்தம் 53 இடங்களில் வென்றது.

★ பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் தொடர்ந்து பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகும் சூழ்நிலையை இரும்புக்கரம் கொண்டு அடக்கி ஒடுக்குவதற்கு, தக்கநடவடிக்கை எடுக்க வேண்டும் என்று த.வெ.க. அரசை இக்கூட்டம் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

★ த.வெ.க. அரசு, கல்லூரி மாணவர் சேர்க்கைகளுக்கு இன்றுவரை சரியான வழிமுறை வழங்காத காரணத்தினால், இந்த ஆண்டு 12ம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டு 60 நாட்கள் கடந்துவிட்ட நிலையில், அரசு தலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 45 சதவீத இடங்கள் காலியாக உள்ளதாக தெரிகிறது.

தகுதியான தேர்வர்களை நீக்கிவிட்டு, குறைந்த மதிப்பெண் பெற்றவர்களுக்கு சாதகமாக வெளியிடப்பட்ட தேர்வு முடிவினை உடனடியாக ரத்து செய்ய வேண்டும். மேலும், இதுகுறித்து சுதந்திரமான முழு விசாரணை நடத்தப்பட்டு, தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள்மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கவும், விசாரணை முடியும் வரை அனைத்து ஆள்சேர்ப்பு நடவடிக்கைகளையும் நிறுத்தி வைக்க வேண்டும்.

★ புதிதாக பொறுப்பேற்றுள்ள அரசு, 'இப்போது தான் ஆட்சிக்கு வந்திருக்கிறோம்' என்று சாக்கு போக்கு சொல்லாமல், மின்வெட்டை முற்றிலுமாக போக்கிடும் வகையில், போர்க்கால அடிப்படையில் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

★ அ.தி.மு.க. எனும் மக்கள் இயக்கம், தலைமுறைகளைக் கடந்து பயணித்து வரும் மாபெரும் பேரியக்கமாகும். இந்த இயக்கத்தை எந்த வகையிலும் பலவீனப்படுத்திவிட முடியாது என்பதை இக்கூட்டம் அழுத்தம் திருத்தமாகப் பதிவு செய்கிறது.

மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# கன்னியாகுமரி அணுக்கனிமக் கொள்ளை: அனுமதி நீட்டிப்பு ஆணையை திரும்பப் பெற வேண்டும் சீமான்



சென்னை, ஜூலை 2

கதிரியக்கத் திட்டத்திற்குத் துணைபோகும் அனுமதி நீட்டிப்பு ஆணையைத் த.வெ.க.அரசு உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என சீமான் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் வட்டத்திற்கு உட்பட்ட 1144 ஹெக்டேர் பரப்பளவில் கதிரியக்கத் தாக்கம் ஏற்படுத்தும் கனிமங்களைப் பிரித்தெடுக்கும் இந்திய அருமணல் நிறுவனத்தின் (IREL) அழிவுத் திட்டத்திற்கு, மேலும் ஓராண்டு கால நீட்டிப்பு வழங்கி அரசாணை (G.O. Ms No. 12) வெளியிட்டிருக்கும் தமிழக வெற்றிக் கழக அரசின் செயல் கடும் கண்டனத்திற்குரியதாகும். அதிகாரத்திற்கு வருவதற்கு முன்பு, கடந்த 03.11.2024 அன்று நடந்த த.வெ.கவின் செயற்குழுக் கூட்டத்தில், 'தென் தமிழகத்தைப் பாழ்படுத்தும் அபாயவிளைவிக்கும் நாசகார நச்சுத்திட்டம்' என இந்த அணுக்கனிம அகழ்வுக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றினார்கள். ஆனால், இன்று அதே திட்டம் 10.06.2026 அன்றுடன் முழுமையாகக் காலாவதியாக இருந்த நிலையில், சரியாக இறுதி நாளில் அத்திட்டத்தை மீண்டும் உயிர்ப்பித்து, ஒட்டுமொத்த தென் தமிழக மக்களையும் கதிரியக்கப் பாதிப்புக்குள்ளாக்கும் செயலுக்குத் துணைபோயிருக்கிறது த.வெ.க அரசு.

கீழ்மிடாலம், மிடாலம், இனயம்புத்தன்துறை, ஏழுதேசம், கொல்லங்கோடு ஆகிய கிராமங்களில் தாது மணலில் இருந்து மோனசைட் (Monazite), சிர்கான் (Zircon) உள்ளிட்ட கதிரியக்கக் கனிமங்களைப் பிரித்தெடுப்பது ஈடுசெய்ய முடியாத சூழலியல் பேரழிவை ஏற்படுத்தும். இந்த அகழ்வினால் ஏற்படக்கூடிய கதிரியக்கம் சுற்றுப்புறக் கிராமங்களில் பரவிப் பொதுமக்களைப் புற்றுநோய்க்கு ஆளாக்கும் ஆபத்து உள்ளது. கடலோர மணலில் இருந்து தாதுப் பொருட்களைப் பிரித்து எடுத்த பிறகு கழிவு நீரையும் மணலையும் கொட்டுவதால் கடல் நீரின் தன்மை மாறுவதோடு, மீன் மற்றும் கடல் வாழ் உயிரினங்கள் அழிந்து மீனவர்களின் வாழ்வாதாரம் நிரந்தரமாகச் சீரழிக்கப்படும்.

சென்ற மாதம் தான் தமிழ்நாட்டின் குவாரிகளுக்கு புகைப்படக் கலைஞர் குழு புடைசூழ பார்வையிட்டு 'இயற்கை வளப் பாதுகாவலர்' என்று சமூக ஊடகங்களில் தன் ரசிகர் பட்டாளத்தை வைத்துப் பாராட்டுப் பத்திரம் வாசித்துக் கொண்டிருந்தார் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் டி.கே. பிரபு. ஆனால், அந்த விளம்பரங்களின் சாயம் வெளுக்க ஒரு மாதம் கூட ஆகவில்லை. அதே அமைச்சகத்தின் கீழ் இருக்கும் இயற்கை வளங்கள் துறைதான், கன்னியாகுமரியின் 1144 ஹெக்டேர் பரப்பளவை அணுக்கனிமக் கொள்ளைக்குத் தாரைவார்க்கும் அரசாணையில் கையெழுத்திட்டுள்ளது.

குவாரிகளை சீரமைப்பது போல் பாவனை செய்து விட்டு, ஒட்டுமொத்த கடலோரத்தையே கதிரியக்கப் பாதிப்பிற்குள்ளாக்கும் மத்திய அரசின் IREL நிறுவனத்திற்கு சிகப்பு மின்கம்பளம் விரிப்பதுதான் அமைச்சர் பிரபுவின் 'அதிரடி' நிர்வாகமா? விளம்பரத்திற்கு ஒரு முகம், மத்திய அரசுக்கு ஒரு முகம் காட்டும் இந்த இரட்டை வேடத்தைத்தான் மக்கள் கடந்தமாதம் கொண்டாடித் தீர்த்தார்களா?

மக்களின் எதிர்ப்பைக் கண்டு அஞ்சிய மத்திய பாஜக அரசு, 08.09.2025 அன்று அறிவித்திருந்த மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தையே நடத்தாமல் திரும்பப்பெற்று, எப்படியாவது இத்திட்டத்தை செயல்படுத்திவிட முடியாதா என்று முயற்சிக்கும் நேரத்தில் மாநில அரசோ, IREL நிறுவனத்திற்குத் தேவையான கடலோர ஒழுங்கு முறை மண்டல (CRZ) அனுமதியைப் பெற வசதியாகக் கால நீட்டிப்பை வழங்கியுள்ளது. மத்திய அரசின் கனிமவளக் கொள்ளைக்குத் தலையாட்டி பொம்மையாகச் செயல்படுவதைத் தவெக அரசு கைவிட வேண்டும்.

தமிழ்நாடு அரசு உடனடியாகத் தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி, IREL நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட கால நீட்டிப்பு அரசாணையை திரும்பப்பெற வேண்டும். கன்னியாகுமரி மண்ணையும் மக்களையும் பாதுகாக்கும் இந்த சட்டப்போராட்டத்திலும், களப்போராட்டத்திலும், இத்திட்டத்தை முழுமையாகக் கைவிடும் வரை மக்களுடன் இணைந்து மாபெரும் எதிர்ப்பினை நாம் தமிழர் கட்சி முன்னெடுக்கும் என எச்சரிக்கின்றேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'மருத்துவர்களின் அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட வேண்டும்' - அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தல்



சென்னை, ஜூலை 2

தேசிய மருத்துவர்கள் தினத்தை முன்னிட்டு, உயிர்களைக் காக்கும் உயரிய பணியில் அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வரும் மருத்துவர்களுக்கு நாடு முழுவதும் வாழ்த்துகளும் பாராட்டுகளும் குவிந்து வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 1ஆம் தேதி கொண்டாடப்படும் இந்நாள், மருத்துவத் துறையின் மகத்தான சேவையையும் சமூக நலனுக்கான அவர்களின் பங்களிப்பையும் நினைவு கூரும் நாளாக அனுசரிக்கப்படுகிறது.


இந்தநிலையில், பா.ம.க. தலைவர் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், "மருத்துவர்கள் கடவுளுக்கும் மேலானவர்கள்: அவர்களின் அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட வேண்டும்!

உயிர்காக்கும் கடவுள்களான மருத்துவர்களின் சேவையை போற்றும் வகையில், தேசிய மருத்துவர்கள் நாள் இன்று கொண்டாடப்படுகிறது. மருத்துவராக பணி செய்து மேற்கு வங்க முதலமைச்சராக உயர்ந்த பி.சி.ராய் அவர்களின் பிறந்தநாள் தான் தேசிய மருத்துவர் நாளாக கொண்டாடப்படுகிறது. இந்த நாளில் அனைத்து மருத்துவர்களுக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மருத்துவர்களின் சேவை மகத்தானது. மனித உயிர்களை காக்கும் பணி கடவுளுக்கும் மேலானது.

அத்தகைய புனிதப் பணியை செய்து மருத்துவர்கள் மாண்புடன் நடத்தப்பட வேண்டும். அவர்களின் அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

# திருமங்கலத்தில் பரபரப்பு... திமுக நிர்வாகி வெட்டிக்கொலை: நீதி கேட்டு உறவினர்கள் போராட்டம்!



மதுரை, ஜூலை 2

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே உள்ள கள்ளிக்குடி தாலுகா இலுப்பங்குளம் கிராமத்தைச் சேர்ந்த திமுக நிர்வாகி கலாநிதி, மர்மக் கும்பலால் கொடூரமான முறையில் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

கலாநிதி தனது இருசக்கர வாகனத்தில் அஜித் என்பவருடன் சென்றுகொண்டிருந்தபோது, காரில் பின்தொடர்ந்து வந்த மர்மக் கும்பல் அவர்களை வழிமறித்ததாக கூறப்படுகிறது. பின்னர், அந்தக் கும்பல் கலாநிதியை சரமாரியாக அரிவாளால் வெட்டினர். இந்தத் தாக்குதலில் பலத்த காயமடைந்த கலாநிதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவருடன் சென்ற அஜித் படுகாயங்களுடன் உயிர்தப்பிய நிலையில், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தக் கொலைச் சம்பவம் அப்பகுதியில் பெரும் பதற்றத்தையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது. தகவல் அறிந்த போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று, உடலை மீட்டு பிரேதப் பரிசோதனைக்காக விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், முன்விரோதம் காரணமாக இந்த கொலை நடைபெற்றதா? அல்லது வேறு ஏதேனும் காரணம் மற்றும் தொடர்புடைய நபர்கள் உள்ளனரா என்பது குறித்து போலீசார் பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையில், குற்றவாளிகளை உடனடியாக கைது செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி, கலாநிதியின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முன்பு திடீர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அந்தப் பகுதியில் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது.

தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு வந்த போலீசார், போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். குற்றவாளிகள் விரைவில் கைது செய்யப்படுவார்கள் என உறுதியளித்ததைத் தொடர்ந்து, உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் சாலை மறியல் போராட்டத்தை கைவிட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# கல்லூரி படிப்பை தொடர அறிவுறுத்திய பெற்றோர்: மாணவர் எடுத்த விபரீத முடிவு

தூத்துக்குடி, ஜூலை 2

தூத்துக்குடி மாவட்டம் எப்போதும்வென்றான் அருகே உள்ள ஆதனூர் நடுத்தெருவை சேர்ந்தவர் ஆதிலிங்கம். விவசாயி. இவரது மனைவி விஜி. இவர்களுக்கு லிங்கதுரை (19 வயது), சுரேந்திரர் ஆகிய 2 மகன்களும், சுமித்ரா என்ற மகளும் உண்டு. இதில் லிங்கதுரை நெல்லையில் உள்ள தனியார் பொறியியல் கல்லூரியில் தங்கி 2ம் ஆண்டு படித்து வந்தார். கடந்த சில நாட்களுக்கு முன்பு மொகரம் பண்டிகை விடுமுறையில் ஊருக்கு வந்துள்ளார். அப்போது, கல்லூரியில் தொடர்ந்து படிக்க விருப்பமில்லை என்று பெற்றோரிடம் தெரிவித்துள்ளார். இதனால் அதிர்ச்சி அடைந்த பெற்றோர், நீ விருப்பப்பட்ட கல்லூரியில் தான் நாங்கள் சேர்த்து உள்ளோம். கல்லூரி படிப்பை நீ தொடர வேண்டும் என அறிவுறுத்தி உள்ளனர். இதை மறுத்த அவரிடம், கல்லூரிக்கு சென்று படிக்குமாறு பெற்றோர் கண்டிப்புடன் கூறியுள்ளனர். இதில் மனமுடைந்து காணப்பட்ட அவர் நேற்று அதிகாலை 5 மணிக்கு வீட்டில் இருந்து வெளியே சென்றுள்ளார். நீண்டநேரமாக அவர் வீடு திரும்பவில்லை. இதையடுத்து அவரை தேடியபோது, சுடுகாட்டு பகுதியில் உள்ள வேப்பமரத்தில் லிங்கதுரை தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டது தெரிய வந்தது.

இதுகுறித்து தகவலின் பேரில் எப்போதும்வென்றான் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று மரத்தில் தொங்கி கொண்டிருந்த அவரது உடலை கைப்பற்றி தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். மேலும் இதுகுறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# 'உயிர் காக்கும் உயரிய பணி' - மருத்துவர்களை பாராட்டிய இபிஎஸ்

சென்னை, ஜூலை 2

ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 1ந் தேதி (அதாவது இன்று) தேசிய மருத்துவர் தினம் கொண்டாடப்படுகிறது. மனித குலத்துக்கு ஆற்றும் மகத்தான சேவைக்காக டாக்டர்களின் பங்களிப்பை போற்றுவதற்காக இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

நோயாளிகளின் உயிரை காப்பாற்றுவதற்காக இரவு பகல் பாராமல் உழைத்து சேவை செய்யும் அனைத்து மருத்துவ வல்லுனர்களுக்கும் இந்த நாள் அர்ப்பணிக்கப்பட்டு உள்ளது. மருத்துவர்களின் சேவைகளையும், இந்தியாவில் மருத்துவ முன்னேற்றத்திற்கான அவர்களின் பெரும் பங்களிப்பையும் அங்கீகரிப்பதற்காக இந்த தினம் கொண்டாடப்படுகிறது.

இந்த நிலையில், அ.தி.மு.க கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தேசிய மருத்துவர் தினத்தையொட்டி உயிர் காக்கும் மருத்துவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து தனது எக்ஸ் தள பக்கத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

உயிர்காக்கும் உயரிய பணியை அர்ப்பணிப்புடனும், கருணையுடனும் மேற்கொண்டு வரும் அனைத்து மருத்துவர்களுக்கும் தேசிய மருத்துவர் தின நல்வாழ்த்துகள்.

கொரோனா உள்ளிட்ட பெருந்தொற்றுக் காலத்திலும் முன்னணி வீரர்களாக நின்று பல உயிர்களைக் காத்திட்ட தங்களின் அரும்பணி நினைவுகூரத்தக்கது.

தங்களின் சேவை தொடர்ந்து மக்கள் நல்வாழ்வினை உறுதிசெய்திடும் வகையில் அமைந்திட எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விவேக் எக்ஸ்பிரஸ் ரெயிலில் ரூ.2.5 லட்சம் மதிப்புள்ள 5 கிலோ கஞ்சா பறிமுதல்



நாகர்கோவில், ஜூலை 2

அசாமில் இருந்து கன்னியாகுமரி நோக்கிச் செல்லும் விவேக்எக்ஸ்பிரஸ்ரெயிலில்சுமார்2.5 மதிப்புள்ள 5 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

அசாம் மாநிலத்திலிருந்து கன்னியாகுமரி உள்ளிட்ட சில பகுதிகளுக்கு ரெயில்கள் மூலம் கஞ்சா கடத்தப்படுவதாகத் தகவல்கள் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தன.

இந்த நிலையில் இன்று (புதன்கிழமை) காலை சுமார் 9.20 மணியளவில் விவேக் எக்ஸ்பிரஸ் ரெயில் அசாமில் இருந்து நாகர்கோவிலை வந்தடைந்தது. பின்னர் ரெயிலின் உள்ளே சுத்தம் செய்வதற்காக ரெயில் அங்கு நிறுத்தப்பட்டிருந்தது.

ரெயில்வே துப்புரவுப் பணியாளர்கள் ரெயிலில் ஏறி சுத்தம் செய்தனர். அப்போது ரெயிலின் பொதுப்பெட்டியில் கழிவறைக்கு அருகில் கேட்பாரற்று ஒரு பை கிடந்தது. உடனே துப்புரவுப் பணியாளர்கள் அந்த பையை எடுத்து ரெயில்வே போலீசாரிடம் ஒப்படைத்தனர்.

அவர்கள் அதனைப் பிரித்து பார்த்தபோது அதில் 6 பொட்டலங்கள் இருந்தன. அந்த பொட்டலத்தில் சுமார் 2.5 லட்சம் ரூபாய் மதிப்புள்ள 5 கிலோ கஞ்சா இருந்தது.

இதுபற்றி மதுவிலக்கு அமலாக்கத்துறை போலீசாருக்கு ரெயில்வே போலீசார் தகவல் தெரிவித்தனர். தகவல் அறிந்து விரைந்த போலீசார் 5 கிலோ கஞ்சாவை கைப்பற்றி எடுத்துச் சென்றனர்.

மேலும் இந்த சம்பவம் குறித்து போலீசார் கடத்தல் வழக்குப்பதிவு செய்து, கடத்தல் கும்பல் குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஊத்தங்கரை தவெக எம்எல்ஏவிடம் ரூ.35 கோடி பேரம்: 3 பேர் கைது



சென்னை, ஜூலை 2

தமிழக வெற்றி கழகத்தின் கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதி உறுப்பினரான என்.இளையராஜா சில தினங்களுக்கு முன்பு கைபேசியில் தொடர்பு கொண்ட திருநாவுக்கரசு என்ற நபர், தான் இந்திய அரசியல் ஜனநாயக உத்திகள் (IPDS) என்ற கருத்து கணிப்பு நிறுவனத்தை நடத்தி வருவதாகவும், ஒரு முக்கிய கட்சியை சேர்ந்த சிலர் கேட்டுகொண்டதன் பேரில் தொடர்பு கொள்வதாகவும், நேரில் சந்திக்க வேண்டும் என்றும் பேசியுள்ளார். ஆனால், தான் வேறு பணியில் இருப்பதாககூறி இளையராஜா தொடர்பை துண்டித்துள்ளார்.

ஆனால், மீண்டும் தொடர்பு கொண்ட மேற்படி திருநாவுக்கரசு, இளையராஜாவிடம், தமிழ்நாடு சட்டப்பேரவையில் சபாநாயகருக்கு எதிராக தீர்மானம் கொண்டு வர உள்ளதாகவும், ஆளுங்கட்சி உறுப்பினராக இருந்தாலும் அத்தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பின்போது தாங்கள் நடந்துகொள்ள வேண்டும் என்றும், அதற்கு சன்மானமாக ரூ.35 கோடி வரை தருவதாகவும் ஆசை வார்த்தை காட்டியுள்ளார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த இளையராஜா எனக்கு விருப்பமில்லை. இனிமேல் என்னிடம் பேசாதீர்கள் என்று கண்டிப்புடன் கூறியபோது. தான் பேசியது குறித்து வெளியே தெரிவித்தால் இளையராஜாவும் அவரது குடும்பத்தினரும் பின்விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று திருநாவுக்கரசு மிரட்டியுள்ளார்.

இதனால் சட்டமன்ற உறுப்பினர் என்.இளையராஜா 29.06.2026 அன்று சென்னை பெருநகர காவல் ஆணையரிடம் அளித்த புகாரில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பொது ஊழியரான தன்னிடம் தனது மக்கள் பணியை செய்யக் கூடாது என்பதற்காகவும், தனது பேச்சுக்கு உடன்பட லஞ்சம் தர முயற்சித்ததோடு. தனக்கும், தனது குடும்பத்தினருக்கும் அச்சுறுத்தல் விடுக்கும் திருநாவுக்கரசு மற்றும் அவருக்கு பின்புலமாக செயல்படும் நபர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கக் கோரியிருந்தார்.

அப்புகாரின்பேரில், டி1( D1) திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. புலன் விசாரணையின் அடிப்படையில் சம்பவத்தில் ஈடுபட்ட சென்னை அரும்பாக்கத்தை சேர்ந்த திருநாவுக்கரசு மற்றும் அவருக்கு பின்னணியாக செயல்பட்ட திருச்சியை சேர்ந்த நரேஷ், சென்னை மேடவாக்கத்தை சேர்ந்த தியாகராஜன் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் புலன் விசாரணையில் திமுக முன்னாள் அமைச்சரும், தற்போதைய கோயம்புத்தூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினருமான வி.செந்தில்பாலாஜியின் சகோதரர் வி.அசோக்குமார் என்பவர் இவ்வழக்கில் கைது செய்யப்பட்ட எதிரி நரேஷை சென்னையில் சந்தித்ததும், வி. செந்தில்பாலாஜி மற்றும் வி.அசோக்குமார் ஆகியோரின் அறிவுரையின் பேரிலேயே எதிரி திருநாவுக்கரசு வழக்கின் புகார்தாரரான சட்டமன்ற உறுப்பினர் இளையராஜாவை தொடர்பு கொண்டு இது போன்ற செயல்களில் ஈடுபட்டதும் தெரிய வந்துள்ளது. மேலும் இவ்வழக்கில் காவல் துறையினர் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றன.

# ஏ.டி.எம். மையத்தில் பணம் நிரப்பும் போது ரூ.1¾ லட்சம் மோசடி: ஊழியர் மீது போலீசில் புகார்

போரூர், ஜூலை 2

செங்கல்பட்டு, மாவட்டம் செய்யூரை சேர்ந்தவர் பாரதி (29). இவர் கடந்த 1½ மாதமாக கோடம்பாக்கம் பகுதியில் செயல்படும் ஏ.டி.எம். மையங்களுக்கு பணம் நிரப்பும் தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை பார்த்து வந்தார். இவர் தினசரி வேளச்சேரியில் இருந்து பணத்தை வாங்கி கொண்டு வாகனம் மூலம் சென்னையில் உள்ள பல்வேறு ஏ.டி.எம் மையங்களுக்கு பணம் நிரப்பி வருவது வழக்கம்.

இந்த நிலையில் கடந்த 20ந் தேதி பாரதி உள்ளிட்ட 2 பேர் கே.கே நகர் முனுசாமி சாலையில் உள்ள கரூர் வைஸ்யா வங்கி ஏ.டி.எம். மையத்திற்கு பணம் நிரப்ப சென்றனர். அப்போது உடனிருந்த நபர் கழிவறை சென்றுவிட்டு சிறிது திரும்பியபோது பாரதி " எனது தாய் உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வந்தது, உடனடியாக நான் ஊருக்கு செல்ல வேண்டும்" என்று கூறி புறப்பட்டு சென்று விட்டார். மறுநாள் வங்கியில் இருந்து ஏ.டி.எம். மையத்தில் நிரப்பப்பட்ட பணத்தில் ரூ.1லட்சத்து 76ஆயிரம் குறைவாக உள்ளதாக தனியார் நிறுவனத்துக்கு தகவல் வந்தது.

இதையடுத்து மேலாளர் பாரதியின் செல்போனை தொடர்பு கொண்டபோது "சுவிட்ச் ஆப்" செய்யப்பட்டு இருந்தது. பணத்துடன் மாயமான ஊழியர் பாரதி மீது நடவடிக்கை எடுக்க கோரி கே.கே நகர் போலீசில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# அனிதா ராதாகிருஷ்ணன் விரைவில் கைது? முன் ஜாமின் கோரி மனு தாக்கல்



சென்னை, ஜூலை 2

தூத்துக்குடி மாவட்டம் ஆத்தூரில் திமுக சார்பில் முன்னாள் முதல்அமைச்சர் கருணாநிதியின் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம் கடந்த மாதம் 20ந் தேதி நடந்தது. இதில் சிறப்பு அழைப்பாளராக முன்னாள் அமைச்சரும், திருச்செந்தூர் தொகுதி எம்.எல்.ஏ.வுமான அனிதா ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டு பேசினார்.

அப்போது, அவர் பேசும் போது தமிழக முதல்அமைச்சர் சினிமா நடிகைகளோடு ஜாலியாக இருந்தார்.அவரைகொண்டு வந்து சட்டசபையில் உட்கார வைத்த உடன் என்ன பேச வேண்டும் என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார் என்று அவதூறு பேசியதாக கூறப்படுகிறது.

இது தொடர்பாக த.வெ.க. கட்சி நிர்வாகிகள் ஆத்தூர் போலீ சில் புகார் கொடுத்தனர். அதன்பேரில் போலீசார் விசாரணை நடத்தி, அனிதா ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ. மீது பி.என்.எஸ். 352 மற்றும் 353/2 ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்தனர்.

இந்த நிலையில், முதல்அமைச்சர் விஜய் குறித்து அவதூறாக பேசியதாக பதியப்பட்ட வழக்கில் திமுக முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் விரைவில் கைது செய்யப்படலாம் என கூறப்பட்ட நிலையில், முன் ஜாமின் கோரி சென்னை ஐகோர்ட்டில் அனிதா ராதாகிருஷ்ணன் இன்று மனு தாக்கல் செய்துள்ளார். அதில் அரசியல் உள்நோக்கத்துடன் தனக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். இந்த மனு நீதிபதி ஜி.கே. இளந்திரையன் முன்பு விரைவில் விசாரணைக்கு வர உள்ளது.

# தவெக எம்.எல்.ஏ.விடம் பேரம்: செந்தில் பாலாஜிக்கு நெருக்கமான 2 பேர் கைது



சென்னை, ஜூலை 2

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை தவெக சட்டமன்ற உறுப்பினர் இளையராஜாவை, வேறு கட்சிக்கு மாறுமாறு கூறி தொடர்ந்து மிரட்டல் விடுத்ததாகவும், இதற்காக பேரம் பேசியதாகவும் யூடியூபர் IPDS திருநாவுக்கரசு மீது புகார் அளிக்கப்பட்டது. இந்த புகாரின் அடிப்படையில், சென்னை திருவல்லிக்கேணி காவல்துறையினர் யூடியூபர் திருநாவுக்கரசை இன்று கைது செய்தனர்.

அவரிடம் போலீசார் தீவிர விசாரணை நடத்தினர். இந்த விசாரணையில் பல்வேறு பரபரப்பு தகவல்கள் வெளியாகின. மேலும் கரூரைச் சேர்ந்த 2 பேர் தான் தவெக எம்.எல்.ஏ.விடம் பேரம் பேசியதாக திருநாவுக்கரசு போலீசாரிடம் தெரிவித்துள்ளார்.

இந்த தகவலின்படி, கரூர் விரைந்த சென்னை போலீசார் கரூரில் சக்தி மெஸ் என்ற பெயரில் உணவகம் நடத்தி வந்த திமுக பிரமுகர்களான கார்த்திக், ரமேஷை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட 2 பேரும் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு நெருக்கமானவர்கள் ஆவர். மேலும் செந்தில் பாலாஜியின் கரூர் கம்பெனியை சேர்ந்தவர்கள் ஆவர்.

இதில் கார்த்திக் திமுக விளையாட்டு அணி துணை செயலாளராக உள்ளார். கைது செய்யப்பட்ட திமுக பிரமுகர்கள் 2 பேரின் வீடுகளிலும் போலீசார் சோதனை நடத்தி வருகின்றனர். இந்த சோதனையில் ரொக்கப்பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. தவெக ஆட்சியை கவிழ்க்க முயற்சி நடந்து வருவதாக அமைச்சர் நிர்மல் குமார் நேற்று கூறிய நிலையில், இன்று செந்தில் பாலாஜிக்கு நெருக்கமான 2 பேர் கைது செய்யப்பட்டிருப்பது அரசியல் களத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. 3 எம்எல்ஏக்களுக்கு குறி வைத்து பேரம் பேசப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. ஒவ்வொரு எம்எல்ஏக்கும் ரூ.15 கோடி பேரம் பேசியதாக கூறப்படுகிறது. இதுதொடர்பாக யூடியூபர் திருநாவுக்கரசு, நரேஷ், தியாகராஜன், கிருஷ்ணன் ஆகிய 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# கடந்த ஆட்சிகளில் பொதுப்பணித் துறையில் ஊழல்: பாதிக்கப்பட்டவர்கள் புகார் அளிக்கலாம் ஆதவ் அர்ஜூனா



சென்னை, ஜூலை 2

விளையாட்டுத்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது;

தமிழ்நாடு அரசின் நிர்வாகம் மிக நேர்மையாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் நடைபெற்று வருகிறது. ஆனால், கடந்த ஆட்சிகளில் தமிழ்நாடு அரசின் பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறையில் மையப்படுத்தப்பட்ட ஊழல்கள், திட்டமிடப்பட்ட விதிமீறல்கள், நிர்ணயிக்கப்பட்ட லஞ்சத்தொகை எனப் பல முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக அறியமுடிகிறது.

பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறைகளின் ஒப்பந்ததாரர்களை அப்போது அதிகாரத்தில் இருந்தவர்கள். அவர்களின் குடும்ப உறவுகள், அதிகாரத்தில் இருந்தவர்களுக்கு நெருக்கமாக இருந்தவர்கள் எனப் பலரிடமும் ஒப்பந்தம் தருவதாக வாக்குறுதி கொடுத்து பணம் வாங்கியுள்ளனர். பலரிடம் பணத்தையும் பெற்றுக் கொண்டு முறையாக வேலைகளையும் ஒதுக்காமல். ஒப்பந்ததாரர்கள் பலர் ஏமாற்றப்பட்டுள்ளார்கள். இது தொடர்பான பல புகார்கள் தற்போது எங்களுக்கு வந்து கொண்டிருக்கின்றன.

மேலும், இதுபோல் பாதிக்கப்பட்டவர்களோ, பணம் கொடுத்து ஏமாற்றப்பட்டவர்களோ புகார் கொடுக்க விரும்பினால், என்னிடமோ அல்லது லஞ்சஒழிப்பு (DVAC) காவல் துறையினரிடமோ புகார் கொடுக்கலாம். என்னிடம் நேரடியாகவோ அல்லது minister.pwd.hd.tn@gmail.com என்ற மின்னஞ்சலிலோ புகார் தெரிவிக்கலாம்.

புகார் தெரிவிப்பவர்கள் பற்றிய விபரங்கள் பாதுகாக்கப்படுவதுடன், அவர்களுக்குத் தேவையான சட்ட பாதுகாப்பும் வழங்கப்படும். விரைவில் அவர்கள் இழந்த பணத்தை மீட்க உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். இனிவரும் காலங்களில் பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறையில், இதுபோன்ற முறைகேடுகள் நடைபெறாது. ஒப்பந்தங்கள்அனைத்தும் நேர்மையுடனும், வெளிப்படைத்தன்மையுடனும் நடைபெறும் என்பதையும் இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொது இடங்களில் மாடுகளை வெட்ட தடை ஐகோர்ட்டு உத்தரவை எதிர்த்து சுப்ரீம்கோர்ட்டுக்கு போன தமிழக அரசு



சென்னை, ஜூலை 2

பொது இடங்களில் மாடுகளை வெட்டத் தடை விதித்த சென்னை ஐகோர்ட்டின் உத்தரவை எதிர்த்து, தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்துள்ளது.

இந்து மக்கள் கட்சியின் இளைஞர் அணி பொதுச்செயலாளரான சூர்ய பிரசாத், சென்னை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில், பக்ரீத் பண்டிகையையொட்டி பொது இடங்களில் மாடுகள் வெட்டப்படுவதாகவும், இது சட்ட விரோதமானது என்பதால், இதுபோன்ற சம்பவங்களை தடுக்க காவல்துறைக்கு உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் கோரியிருந்தார்.

இந்த மனுவை நீதிபதிகள் ஜி.ஆர். சுவாமிநாதன் மற்றும் வி. லட்சுமி நாராயணன் ஆகியோர் அடங்கிய விடுமுறைக்கால அமர்வு கடந்த மே 27ஆம் தேதி விசாரித்தது.

அப்போது, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் அனுமதிக்கப்பட்ட இடங்களில் மட்டுமே கால்நடைகளை வெட்ட வேண்டும் என்று விதிமுறைகள் உள்ளதை சுட்டிக் காட்டிய நீதிமன்றம், அனுமதிக்கப்பட்ட இடங்களைத் தவிர வேறு எந்தப் பொது இடங்களிலும் மாடுகளை வெட்டக் கூடாது என்று உத்தரவிட்டது. மேலும், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளரும், மாநில காவல்துறை தலைமை இயக்குநரும் (டிஜிபி), மாநிலம் முழுவதும் பொது இடங்களில் மாடுகள் வெட்டப்படாததை உறுதி செய்ய வேண்டும் என்றும் உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தது.

இந்த நிலையில், ஐகோர்ட்டின் இந்த உத்தரவை எதிர்த்து, தமிழக அரசின் சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த மனுவில், பொது இடங்களில் மாடுகள் மற்றும் கன்றுகளை வெட்டத் தடை விதித்த ஐகோர்ட்டு உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்றும், அதுவரை அந்த உத்தரவுக்கு இடைக்காலத் தடை வழங்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

# தூத்துக்குடியில் மனைவியை பிரிந்தவர் மர்ம மரணம்

தூத்துக்குடி, ஜூலை 3

சங்கரலிங்கபுரம் அருகே மனைவி, குழந்தைகளைபிரிந்து வாழ்ந்து வந்த நபர், விவசாய நிலத்தில் மர்மமான முறையில் இறந்து கிடந்த சம்பவம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தூத்துக்குடி மாவட்டம் நாகலாபுரம் பள்ளிவாசல்பட்டி சந்தன மாரியம்மன் கோவில் தெருவைச் சேர்ந்தவர் மாரிச்செல்வம் (45). இவருக்குத் திருமணமாகி 2 ஆண் பிள்ளைகள் உள்ளனர். கடுமையான குடிப்பழக்கத்திற்கு அடிமையானதால், இவருடைய மனைவி மற்றும் பிள்ளைகள் கடந்த 15 ஆண்டுகளாக இவரைப் பிரிந்து தனியாக வாழ்ந்து வருகின்றனர். இதனால் மாரிச்செல்வம் தனது பெற்றோர் வீட்டில் வசித்துக்கொண்டு, கூலி வேலைக்கு சென்று வந்துள்ளார்.

இந்த நிலையில், நேற்று காலை வழக்கம்போல் வீட்டை விட்டு வெளியே சென்ற மாரிச்செல்வம், நீண்ட நேரமாகியும் வீடு திரும்பவில்லை. இதனால் பதற்றமடைந்த குடும்பத்தினர் அவரை பல்வேறு இடங்களில் தேடி வந்தனர். இதற்கிடையே, மேலக்கல்லூரணி அருகே உள்ள இமானுவேல் என்பவருக்கு சொந்தமான புன்செய் நிலத்தில் ஆண் சடலம் ஒன்று கிடப்பதாக அப்பகுதியினர் சங்கரலிங்கபுரம் காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்தனர்.

இதையடுத்து காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர். அதில் அங்கு இறந்து கிடந்தது மாரிச்செல்வம் என்பது தெரியவந்தது. அவரது உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் அவரது மரணத்திற்கான காரணம் குறித்து சங்கரலிங்கபுரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# காவிரி ஆற்றில் சாக்கு மூட்டையில் வாலிபர் உடல் மீட்பு

சேலம், ஜூலை 2

சேலம் மாவட்டம் மேச்சேரி அருகே கூனாண்டியூர் காவிரி ஆற்றில் சாக்கு மூட்டையில் இறந்த நிலையில் ஒரு வாலிபரின் உடல் மீட்கப்பட்டது குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

சேலம் மாவட்டம் மேச்சேரி அருகே கூனாண்டியூர் காவிரி ஆற்றில் சாக்கு மூட்டையொன்று துர்நாற்றத்துடன் மிதந்தது. மீனவர்கள் கொடுத்த தகவலின்பேரில், மேச்சேரி போலீசார் அந்த மூட்டையை மீட்டு பிரித்தபோது அதில் வாலிபர்ஒருவர்கழுத்து நெரிக்கப்பட்டுசடலமாகஇருந்தது தெரியவந்தது. யாரோ அவரை கொலை செய்து ஆற்றில் வீசியிருப்பதும் தெரியவந்தது. அந்த உடலை மீட்ட போலீசார், சேலம் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இந்த சம்பவம் தொடர்பாக கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த புகாரின்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து, கொலையானவர் யார்? கொலைக்கான காரணம் என்ன என்பது குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வால்பாறையில் குடியிருப்பு பகுதியில் உலாவும் சிறுத்தைகள்: தேயிலை தோட்ட தொழிலாளர்கள் அச்சம்



வால்பாறை, ஜூலை 2

கோவை மாவட்டம் வால்பாறையில் குடியிருப்பு பகுதியில் உலாவும் சிறுத்தைகளால் தேயிலை தோட்ட தொழிலாளர்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

கோவை மாவட்டம் வால்பாறை, ஆனைமலை புலிகள் காப்பகம் பகுதிக்கு உட்பட்டதாகும். தற்போது இப்பகுதியில் காட்டு யானைகள், சிறுத்தை, கரடி என வினவிலங்குகள் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

குறிப்பாக, வால்பாறை நகர குடியிருப்பு பகுதிகள், எஸ்டேட் தொழிலாளர்கள் வசிக்கும் பகுதிகளுக்குள் பகல் மற்றும் இரவு நேரங்களில் புகுந்து பொதுமக்களை அச்சுறுத்தி வருகிறது. குறிப்பாக, தேயிலை தோட்ட தொழிலாளர்கள் அச்சம் அடைந்துள்ளனர். இதற்கிடையே, வனத்துறையினர் மற்றும் வேட்டை தடுப்பு காவலர்கள், பொதுமக்கள் மாலை நேரங்களில் வெளியே வர வேண்டாம், குழந்தைகளும் விளையாட வர வேண்டாம் என விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், சோலையார் முடிஸ் பகுதியில் உள்ள குடியிருப்பில்2சிறுத்தைகள் உலா வந்த சிசிடிவி காட்சிகள் சமூக வலைதளங்களில் பரவி வருகிறது. இதனால், அச்சம் அடைந்துள்ளபொதுமக்கள் சிறுத்தைகளை கூண்டு வைத்து பிடிக்க வனத்துறையினரிடம் கோரிக்கை வைத்துள்ளனர்.

# அதிக கட்டணம் வசூலிக்கும் மருத்துவக் கல்லூரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் : பிரேமலதா விஜயகாந்த



சென்னை, ஜூலை 2

தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பாதாவது:

தமிழகத்தின் பல்வேறு மருத்துவக் கல்லூரிகளில் கூடுதல் கல்விக் கட்டணம் வசூலிக்கப்படுவதாக மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடமிருந்து தொடர்ந்து புகார்கள் எழுந்துவருகின்றன. தேசிய மருத்துவ ஆணையம் (NMC) விதிமுறைப்படி கல்லூரிகள் 5 அல்லது 5.5 ஆண்டுகளுக்குக் கட்டணம் வசூலிக்கக் கூடாது என்று NMC மற்றும் நீதிமன்றத் தீர்ப்புகள் திட்டவட்டமாகக் கூறியுள்ளன. எம்.பி.பி.எஸ். (MBBS) படிப்பின் கல்விக்காலம் நான்கரை ஆண்டுகள் மட்டுமே.

ஆனால், சில மருத்துவக் கல்லூரிகள் ஐந்து ஆண்டுகளுக்கான கல்விக் கட்டணத்தை வசூலிப்பதாக கூறப்படுகிறது. இது மாணவர்களுக்கும், அவர்களது பெற்றோர்களுக்கும் கூடுதல் பொருளாதாரச் சுமையை ஏற்படுத்துவதுடன், நியாயமான நடைமுறையாகவும் தெரியவில்லை. எனவே, விதிமுறைகளை மீறி கூடுதல் கட்டணம் அல்லது நான்கரை ஆண்டுகள் மட்டுமே கல்விக்காலம் இருந்தும் ஐந்து ஆண்டுகளுக்கான கட்டணத்தை வசூலிக்கும் மருத்துவக் கல்லூரிகள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், மருத்துவக் கல்வித் துறை மற்றும் அதனை சார்ந்த அமைச்சர் இந்த விவகாரத்தை நேரடியாகக் கண்காணித்து, இனி இது போன்ற தவறுகள் எந்த மருத்துவக் கல்லூரியிலும் நடைபெறாத வகையில் கடுமையான கண்காணிப்பு மற்றும் நடவடிக்கைகளை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும் என வலியுறுத்துகிறோம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாணிக்கம் தாகூர் தலைமையில் இன்று மாவட்ட காங்கிரஸ் தலைவர்கள் கூட்டம்



சென்னை, ஜூலை 3

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்த செல்வப்பெருந்தகை மாற்றப்பட்டு. அவருக்கு பதிலாக நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சி கொறடா மாணிக்கம் தாகூர் எம்.பி. புதிய மாநிலத் தலைவராக அகில இந்திய காங்கிரஸ் தலைமையால் நியமிக்கப்பட்டார். பின்னர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைமையகமான சென்னை சத்தியமூர்த்தி பவனில் மாணிக்கம் தாகூர் பதவியேற்கும் விழா நடைபெற்றது.

இதில்,தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவராக மாணிக்கம் தாகூர் எம்.பி. பதவி ஏற்றுக்கொண்டார். அவர் பதவி ஏற்ற நிலையில், மாவட்ட காங்கிரஸ் தலைவர்கள் கூட்டம் சென்னை சத்திய மூர்த்தி பவனில் நாளை (2ந் தேதி) காலை 10.30 மணிக்கு நடைபெறும் என காங்கிரஸ் துனைத்தலைவர் கோபண்ணா தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் எம்.பி. தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்திற்கு, சட்டமன்ற காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ராஜேஷ்குமார் முன்னிலை வகிக்கிறார். கூட்டத்தில், கட்சியின் வளர்ச்சி பணிகள் குறித்தும், ஒன்றிணைந்து செயல்படுவது குறித்தும் விவாதிக்கப்படும் என தெரிகிறது.

# வடலூர்: ஓடும் பேருந்தின் டீசல் டேங்க் வெடித்து தீ விபத்து நூலிழையில் உயிர் தப்பிய பயணிகள்!



வடலூர், ஜூலை 2

கடலூர் மாவட்டம் வடலூர் பகுதியில் இன்று 'சௌமியா' என்ற தனியார் பேருந்து விருத்தாச்சலம் நோக்கி சென்று கொண்டிருந்த போது, அதன் டீசல் டேங்க் திடீரென பயங்கர சத்தத்துடன் வெடித்துச்சிதறியது. இதையடுத்து பேருந்து முழுவதும் தீப்பற்றி எரிந்து முற்றிலும் சேதமடைந்தது.

வழக்கம்போல் பயணிகளுடன் பயணித்துக் கொண்டிருந்த பேருந்தில் ஏற்பட்ட இந்த திடீர் விபத்தால் அங்கு பரபரப்பான சூழ்நிலை உருவானது. இருப்பினும், தீ வேகமாக பரவத் தொடங்கிய சில நொடிகளுக்குள் பேருந்தில் இருந்த பயணிகள் அனைவரும் அவசரமாக கீழே இறக்கப்பட்டனர். இந்த விபத்தில் அதிர்ஷ்டவசமாக உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. அனைத்து பயணிகளும் பாதுகாப்பாக மீட்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. நடுரோட்டில் பேருந்து கொழுந்துவிட்டு எரிந்த சம்பவத்தால் அருகில் இருந்த ஐந்து கடைகள் மற்றும் ஆறு இருசக்கர வாகனங்கள் சேதமடைந்தன. அப்பகுதியில் போக்குவரத்து சிறிது நேரம் பாதிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பாக காவல்துறையினரும் தீயணைப்புத்துறையினரும் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# திருப்பூர் கோவில்வழி பஸ் நிலைய மேற்கூரை சீரமைப்பு



திருப்பூர், ஜூலை 2

திருப்பூர் கோவில்வழியில் தியாகி திருப்பூர் குமரன் தெற்கு பஸ் நிலையம் ரூ.26 கோடியில் கட்டப்பட்டு பயன்பாட்டுக்கு வந்துள்ளது. தென்மாவட்டங்களுக்கு செல்லும் பஸ்கள் இங்கிருந்து செல்கின்றன. இந்த பஸ் நிலையத்தில் 35 கடைகள் உள்ளன. இதில் பல கடைகள் ஏலம் போகாமல் பூட்டியே கிடக்கிறது. சமீபத்தில் வீசிய சூறைக்காற்றுக்கு பஸ் நிலையத்தில் மதுரை, சிவகங்கை, ராமேஸ்வரம் பஸ்கள் நிறுத்தும் பகுதிகள், அதுபோல் தேனி, நாகர்கோவில், திண்டுக்கல் பஸ்கள் நிறுத்தும் இடங்களில் இருந்த மேற்கூரைபறந்தன. இதனால் மேற்கூரை இல்லாமல் வெறும் கம்பிகளாக காட்சியளித்தன. இந்த மேற்கூரையை சீரமைக்க வேண்டும் என்று செய்தி பிரசுரிக்கப்பட்டது. தன்எதிரொலியாக பஸ் நிலையத்தில் சூறைக்காற்றுக்கு சேதமாகி இரும்பு கம்பிகளாக காட்சியளித்த மேற்கூரையை சீரமைக்கும் பணி நேற்று நடைபெற்றது. மேற்கூரை பகுதியில் ஊழியர்கள் சீரமைப்பு பணியில்ஈடுபட்டனர்.பஸ்நிலையத்தின் உள்ளே 2 இடங்களில் உள்ள இலவச மற்றும் கட்டண கழிப்பிடங்கள் பூட்டியே கிடக்கிறது. அதையும் பயணிகளின் பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது.

# திண்டுக்கல்: புலிகள், வனவிலங்குகள் கணக்கெடுப்பு 7 சரகங்களில் 430 சிசிடிவி கேமராக்கள் பொருத்தம்

திண்டுக்கல், ஜூலை 2

திண்டுக்கல் மாவட்ட வனத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள வனப்பகுதிகளில், புலிகள் மற்றும் இதர வனவிலங்குகளின் எண்ணிக்கையைக் கணக்கிடும் பணிகள் தீவிரமாகத் தொடங்கியுள்ளன. ஆண்டுதோறும் பருவமழைக்கு முந்தைய, பிந்தைய வன விலங்கு கணக்கெடுப்பு பணி நடப்பது வழக்கம். அதன்படி ஆண்டுக்கு ஒருமுறை தானியங்கி கேமராக்கள் மூலமாக புலிகள் கணக்கெடுப்பு நடக்கிறது. திண்டுக்கல் மாவட்டம் வனத்துறை கன்னிவாடி, நத்தம், சிறுமலை, வத்தலகுண்டு, ஒட்டன்சத்திரம், அய்யலூர்,அழகர் கோவில் ஆகிய 7 சரகங்களிலும் வனவிலங்குகள், புலி வழித்தடங்களுக்கான சாத்தியக்கூறுகளை கண்டறிய வனப்பகுதிகளில் சிசிடிவி கேமராக்கள் பொருத்தும் ஆயத்த பணி துவங்கி உள்ளது. வன விலங்குகள் நடமாட்டம், வாழ்விடம் அவற்றின் சூழல் சுற்றுப்பாதை ஆகியவற்றை கருத்தில் கொண்டு 7 சரகங்களில் 403 இடங்களில் முதற்கட்டமாக 430 சிசிடிவிகள் பொருத்துவதற்காக முடிவு செய்யப்பட்டுள்ளது.

தினகனி
NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253
02.07.2026

# மயிலாடுதுறையில் கீற்றுக்கொட்டகையில் காதல் ஜோடி தூக்கில் பிணம் ஆணவ கொலையா...?



பொறையாறு. ஜூலை 2
மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி அருகே உள்ள புதுப்பாளையம் சுனாமி குடியிருப்பு பகுதியை சேர்ந்தவர் மாரிமுத்து. இவருடைய மகன் பார்த்திபன்(வயது 19). இவர், விவசாய கூலி வேலை செய்து வந்தார். இவருக்கும் அருகில் உள்ள சாத்தங்குடி கிராமத்தை சேர்ந்த லட்சுமிகாந்தன் மகள் திவ்யதர்ஷினிக்கும் (17) காதல் இருந்து வந்ததாக கூறப்படுகிறது.

திவ்யதர்ஷினி பிளஸ்2 முடித்து விட்டு கல்லூரியில் சேருவதற்காக காத்து இருந்தார். இவர்கள்இருவரும்வெவ்வேறுசமூகத்தை சேர்ந்தவர்கள். இதனால் இவர்கள் காதலுக்கு எதிர்ப்பு கிளம்பி இரு குடும்பத்தினர் இடையே முன்விரோதம் ஏற்பட்டது. நேற்று முன்தினம் ஏற்பட்ட பிரச்சினையில் திவ்யதர்ஷினியின் உறவினர்கள், பார்த்திபனை சாதி பெயரை கூறி தாக்கியதாக பொறையாறு போலீஸ் நிலையத்தில் பார்த்திபனின் உறவினர் புகார் அளித்தார். இந்த நிலையில் தனது மகள் திவ்யதர்ஷினியை காணவில்லை எனக்கூறி அவரது தந்தை லட்சுமிகாந்தன், பொறையாறு போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் விசாரணை நடத்தினர். அப்போது சந்தேகத்தின் பேரில் போலீசார், பார்த்திபனை செல்போனில் தொடர்பு கொண்டனர்.

இதைத்தொடர்ந்து போலீஸ் இன்ஸ்பெக்டர் சந்தானமேரி மற்றும் போலீசார் அங்கு விரைந்து சென்று பார்த்தனர். அப்போது அங்குள்ளஒருசிறியகீற்றுக்கொட்டகையில் பார்த்திபன் மற்றும் திவ்யதர்ஷினி ஆகிய இருவரும் தனித்தனியாக தூக்கில் பிணமாக தொங்கினர். இதைக்கண்டு அதிர்ச்சி அடைந்த போலீசார், இருவரின் உடல்களையும் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

பார்த்திபன்திவ்யதர்ஷினி ஆகிய இருவரும் வெவ்வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்பதால் பார்த்திபனை ஆணவக்கொலை செய்ததாக கூறி பார்த்திபனின் உறவினர்கள் மற்றும் கிராம மக்கள். திவ்யதர்ஷினியின் வீடு மற்றும் உறவினர்களின் வீட்டை அடித்து நொறுக்கினர். மேலும் அங்கு இருந்த 4 மோட்டார் சைக்கிள்களையும் உடைத்து சேதப்படுத்தினர். இதனால் அங்கு பதற்றமான சூழல் நிலவியது. இதைத்தொடர்ந்து அந்த பகுதியில் 200க்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டு மேலும் அசம்பாவிதம் ஏற்படாமல் இருக்க பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

மயிலாடுதுறை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு(பொறுப்பு) ஸ்டாலின், சீர்காழி உதவி கலெக் டர் சுரேஷ் ஆகியோர் சம்பவ இடத்தை நேரில் பார்வையிட்டு பாதுகாப்பை பலப்படுத்தினர். இதுகுறித்து சாத்தங்குடி கிராம நிர்வாக அலுவலர் ராஜா, பொறையாறு போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். இதன்பேரில் போலீசார் காதலர்கள் தற்கொலை செய்து கொண்டார்களா? அல்லது ஆணவ கொலை செய்யப்பட்டார்களா? என்ற கோணத்தில் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள். பிரேத பரிசோதனை முடிவில்தான் காதலர்கள் தற்கொலை செய்து கொண்டார்களா?. அல்லது கொலை செய்யப்பட்டார்களா? என்பது குறித்த முழு விவரங்கள் தெரிய வரும் என்று போலீசார் தெரிவித்தனர்.

மேலும் நேற்று முன்தினம் பார்த்திபன் உறவினர் கொடுத்த புகாரின் பேரில் திவ்யதர்ஷினியின் தந்தை லட்சுமிகாந்தன், உறவினர்கள் சூர்யா, மணிமாறன், வசந்தன், விஜயகுமார் ஆகிய 5 பேர் மீது வன்கொடுமை தடுப்புச்சட்டத்தின் கீழ் பொறையாறு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். காதல் ஜோடி மரணத்தால் பொறையாறு அருகே உள்ள சாத்தங்குடி, புதுப்பாளையம் பகுதியில் தொடர்ந்து பதற்றமான சூழல் நிலவுவதால் மயிலாடுதுறை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு(பொறுப்பு) ஸ்டாலின் உத்தரவின் பேரில் கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு சுரேஷ், சீர்காழி துணை போலீஸ் சூப்பிரண்டு சரவணன் மேற்பார்வையில் போலீசார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளது.

இந்த நிலையில் பார்த்திபன் சாவு தொடர்பாக கொலை வழக்குப்பதிவு செய்யக்கோரி விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர்கள் மோகன்குமார். அன்பரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு மாவட்ட செயலாளர் சீனிவாசன், ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், இந்திய கம்யூனிஸ்டு மாவட்ட துணை செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, தலைமையில் திரளானோர் பொறையாறு போலீஸ் நிலையம் முன்பு திரண்டனர். அவர்களிடம் போலீஸ் சூப்பிரண்டு(பொறுப்பு) ஸ்டாலின் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது சாத்தங்குடிதரங்கம்பாடி சாலைக்கு வந்த பார்த்திபனின் உறவினர்கள் மற்றும் கட்சியினர் பெட்ரோல் பங்க் அருகே சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது பார்த்திபன் சாவு தொடர்பாக கொலை வழக்கு பதிவு செய்தால்தான் உடலை பெறுவோம் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் போலீசாரிடம் தெரிவித்தனர். இதனையடுத்து சாலைமறியலில் ஈடுபட்டவர்களை போலீசார் கைது செய்தனர். இதனால் மயிலாடுதுறைதரங்கம்பாடி சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதேபோல திருக்கடையூரில் இந்திய வாலிபர் சங்கத்தினர் பார்த்திபன் சாவுக்கு நீதி கேட்டு சாலை மறியலில் ஈடுபட்டனர். மறியலில் ஈடுபட்ட சுமார் 25 பேரை போலீசார் கைது செய்தனர்.

# டாட்டு கலைஞர் கத்திரிக்கோலால் குத்தி கொலை: பூ வியாபாரி கைது



காஞ்சீபுரம், ஜூலை 2
காஞ்சீபுரத்தில் குடும்பத்தகராறில் மகனை தந்தை கத்திரிக்கோலால் குத்திக்கொன்றார்.

காஞ்சீபுரம் மாநகராட்சி அறப்பெரும் செல்வி தெரு பகுதியை சேர்ந்தவர் ஏழுமலை (வயது 50). பூக்களை மாலையாக கட்டி வியாபாரம் செய்து வந்தார். இவரது மகன் ரூபேஷ்(22), டாட்டு கலைஞர். காதல் திருமணம் செய்திருந்தார். இவருக்கு மனைவியும் 2 குழந்தைகளும் உள்ளனர்.

தந்தைக்கும், மகனுக்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு தந்தை, மகன் இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டு கைகலப்பு முற்றிய நிலையில் மகன் ரூபேஷ் திடீரென வீட்டில் இருந்த கத்திரிக்கோலை கொண்டு வந்து தந்தை ஏழுமலையை குத்த முயன்றார்.

இதை தடுத்த ஏழுமலை கத்திரிக்கோலை பறித்து மகன் ரூபேஷை குத்தினார். இதில் படுகாயம் அடைந்த ரூபேஷ் மயங்கி விழுந்து பரிதாபமாக உயிரிழந்தார். இதுகுறித்து உடனடியாக அருகில் இருந்தவர்கள் சிவகாஞ்சி போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் சுரேஷ் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று ரூபேஷ் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக காஞ்சீபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். போலீசார்வழக்குப்பதிவு செய்து ரூபேஷின் தந்தை ஏழுமலையை கைது செய்தனர்.

# வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் விலை குறைந்தது எவ்வளவு தெரியுமா..?

பாரத், இந்துஸ்தான், இந்தியன் ஆயில் ஆகிய பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் வீடுகளுக்கு 14.20 கிலோ எடையிலும், வணிக பயன்பாட்டுக்கு 19 கிலோ எடையிலும், சமையல் கியாஸ் சிலிண்டர்களை நாடு முழுவதும் வினியோகம் செய்து வருகின்றன.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை மற்றும் அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு எண்ணெய் நிறுவனங்கள் பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் கியாஸ் சிலிண்டர்களின் விலைகளை நிர்ணயித்து வருகின்றன. இதில் சமையல் கியாஸ் சிலிண்டர்களின் விலைகளை மாதத்தின் முதல் தேதியில் மாற்றி அமைத்து வருகிறது.

இந்தநிலையில், இன்று மாதத்தின்முதல்நாள்என்பதால், சிலிண்டர் விலை நிலவரத்தை எண்ணெய் நிறுவனங்கள் வெளியிட்டுள்ளன. அதன்படி, சென்னையில் 19 கிலோ எடை கொண்ட வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலை ரூ.172.50 குறைந்து ரூ.3.106க்கு விற்பனை செய்யப்படுகிறது. 14.2 கிலோ எடை கொண்ட சமையல் சிலிண்டர் விலையில் எந்தவித மாற்றமுமின்றி ரூ.957.50க்கு விற்பனையாகிறது.

மேற்காசிய போர்சூழல் காரணமாக கடந்த 4 மாதங்களாக உயர்ந்துவந்த சிலிண்டரின்விலைதற்போதுகுறைந்துள்ளது. இதனால் வணிகர்கள் சற்று நிம்மதி அடைந்துள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள் (02.07.2026)

மேஷம்: புதிய முயற்சிகளில் முன்னேற்றம். குடும்பத்தில் மகிழ்ச்சி. செலவுகளில் கட்டுப்பாடு நல்லது.

ரிஷபம்: பணவரவு சீராக இருக்கும். வேலை தொடர்பான நல்ல செய்தி கிடைக்கலாம்.

மிதுனம்: முக்கிய முடிவுகளை அமைதியாக எடுக்கவும். நண்பர்களின் ஆதரவு கிடைக்கும்.

கடகம்: உடல்நலத்தில் கவனம் தேவை. தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்க்கவும்.

சிம்மம்: தொழிலில் வளர்ச்சி வாய்ப்பு. குடும்பத்தினருடன் நல்ல நேரம் அமையும்.

கன்னி: பயணவாய்ப்புகள் உருவாகலாம். பொருளாதாரத்தில் முன்னேற்றம் காணலாம்.

துலாம்: நிலுவையில் இருந்த வேலைகள் முடிவடையும். உறவுகளில் புரிதல் அதிகரிக்கும்.

விருச்சிகம்: பொறுமையுடன் செயல்பட்டால் வெற்றி. முதலீட்டில் கவனம் அவசியம்.

தனுசு: புதியவாய்ப்புகள்கிடைக்கலாம். மாணவர்களுக்கு சாதகமான நாள்.

மகரம்: பணியில் பொறுப்புகள் அதிகரிக்கும். திட்டமிட்டு செயல்பட்டால் நல்ல பலன்.

கும்பம்: நீண்டநாள்ஆசைகள்நிறைவேற வாய்ப்பு. குடும்ப ஆதரவு கிடைக்கும்.

மீனம்: மனநிம்மதி அதிகரிக்கும். வருமானம் உயரக்கூடிய வாய்ப்பு உள்ளது.

# மதுபோதையில் தாயை தாக்கிய ஆட்டோ ஓட்டுநர் எரித்து கொலை: தூத்துக்குடியில் பயங்கரம்



தூத்துக்குடியில் மதுபோதையில் தாய் மற்றும் தங்கையைத் தாக்கி, குழந்தையை கொல்லப் போவதாக மிரட்டிய மகனை, பெற்ற தந்தையே தின்னர் ஊற்றி தீவைத்து எரித்து கொலை செய்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தூத்துக்குடி மடத்தூர் அம்மன் கோவில் தெருவைச் சேர்ந்தவர் அருள்ராஜ் (வயது 32). ஆட்டோ ஓட்டுநரான இவர், கடுமையான மதுப்பழக்கத்திற்கு அடிமையாகி இருந்தார். இதன் காரணமாக கடந்த 2021ம் ஆண்டு கயத்தாறில் உள்ள மறுவாழ்வு மையத்தில் 3 மாதங்கள் சிகிச்சை பெற்றுதிரும்பிய அவர், சில காலம் நன்றாக இருந்துவிட்டு மீண்டும் குடிக்கத் தொடங்கியுள்ளார். இதனால் குடும்பத்தில் அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்துள்ளது.

இந்த நிலையில், நேற்று இரவு அருள்ராஜ் கடும் போதையில் வீட்டிற்கு வந்து தனது தாயை தாக்கியுள்ளார். இதில் அவரது தலை மற்றும் கைகளில் ரத்தக்காயம் ஏற்பட்டது. மேலும், சுரண்டையிலிருந்து தனது குழந்தைக்கு உடல்நலம் சரியில்லாததால் தாய் வீட்டிற்கு வந்திருந்த தனது தங்கையையும் மிரட்டி, அவரது குழந்தையை கொன்று விடுவதாக பிரச்சினை செய்துள்ளார். இதனை தட்டிக் கேட்ட தந்தை தளமுத்துவையும்(60) அருள்ராஜ் தாக்கியுள்ளார்.

இதனால் இருவருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து குடும்பத்தினர் பயந்து வீட்டைப் பூட்டிக்கொண்டநிலையில், அருள்ராஜ் வீட்டின் வாசல் அருகே தூங்கியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த தந்தை தளமுத்து, வீட்டில் பெயிண்டிங் வேலைக்காக வைத்திருந்த தின்னர் திரவத்தை, தூங்கிக் கொண்டிருந்த அருள்ராஜ் மீது ஊற்றித் தீ வைத்துள்ளார். இதில் உடல் கருகிய அருள்ராஜ் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். இச்சம்பவம் குறித்துத் தகவலறிந்த சிப்காட் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் தனசேகரன், சப்இன்ஸ்பெக்டர் காவுராஜன் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, உயிரிழந்த அருள்ராஜின் உடலை கைப்பற்றி பிரேதப் பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், மகனை கொன்ற தந்தை தளமுத்துவை கைது செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.


# நடிகைகளை கண்ணியமாக பாருங்கள்; மரியாதையாக நடத்துங்கள் கீர்த்தி சனோன்



பாலிவுட் சினிமாவின் முன்னணி நடிகையான கீர்த்தி சனோன், சமீபத்தில் ராஷ்மிகாவுடன்இணைந்துநடித்த 'காக்டெயில்2' படம் வெளியாகி நல்லவரவேற்பைப் பெற்றது. இதற்கிடையில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட கீர்த்தி சனோன், சமூக வலைதளங்களில் எதிர்மறை கருத்துகள் பரவுவது குறித்த தனது வேதனையை பகிர்ந்து கொண்டார். "நடிகைகள் குறித்து விமர்சிப்பது என்பது சிலருக்கு பொழுதுபோக்காகி விட்டது. லேசாக ஆடைகள் விலகினால் போதும், உடனே அந்த புகைப்படங்களை சமூக வலைதளங்களில் பதிவிட்டு, தங்கள் விஷ கருத்துகளை வெளிப்படுத்துகிறார்கள்.

நடிகைகளை கண்ணியமாக பாருங்கள். உங்களுக்கு திரையில் தோன்றி மகிழ்விக்கும் எங்களை மரியாதையாக நடத்துங்கள். போலி ஆபாச படங்களை வெளியிட்டு சந்தோஷம் காண வேண்டுமா? இது கேவலம் இல்லையா..." என்று கீர்த்தி சனோன் கொந்தளித்துள்ளார்.

# லோகேஷ் கனகராஜ் நடித்த 'டிசி' படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு




இயக்குநராக பல வெற்றிப்படங்களை கொடுத்து தனக்கென தனி ரசிகர் பட்டாளத்தை உருவாக்கியுள்ள லோகேஷ் கனகராஜ், தற்போது நடிகராகவும் கவனம் செலுத்தி வருகிறார். அந்த வகையில், அருண் மாதேஸ்வரன் இயக்கத்தில் உருவாகியுள்ள 'டிசி' திரைப்படத்தில் அவர் முதன்மை கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இந்தப் படத்தின் வெளியீட்டு தேதியை படக்குழு தற்போது அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

'மாநகரம்' படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமான லோகேஷ் கனகராஜ், தொடர்ந்து 'கைதி', 'மாஸ்டர்', 'விக்ரம்', 'லியோ' உள்ளிட்ட வெற்றிப்படங்களை இயக்கி தமிழ் சினிமாவின் முன்னணி இயக்குநர்களில் ஒருவராக உயர்ந்தார். மேலும், லோகேஷ் சினிமாட்டிக் யூனிவர்ஸ் (LCU) என்ற புதிய முயற்சியின் மூலம் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளார். சமீபத்தில் ரஜினிகாந்தை வைத்து இயக்கிய 'கூலி' திரைப்படமும் வெளியாகியுள்ளது.

சன்பிக்சர்ஸ்தயாரித்துள்ள 'டிசி' திரைப்படத்தில் லோகேஷ் கனகராஜ் 'தேவதாஸ்' என்ற கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். அவருக்கு ஜோடியாக வாமிகா கபி 'சந்திரா' கதாபாத்திரத்தில் நடித்துள்ள நிலையில், சஞ்சனா உள்ளிட்ட பலரும் முக்கிய வேடங்களில் இடம்பெற்றுள்ளனர். இப்படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார்.

சமீபத்தில் வெளியான கிளிம்ப்ஸ் மற்றும் டிரெய்லர் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றன. அதில் வாமிகா கபி மற்றும் சஞ்சனா பாலியல் தொழிலாளிகளாகவும், லோகேஷ் கனகராஜ் கேங்ஸ்டராகவும் நடித்திருப்பது தெரியவந்தது. பழிவாங்கும் கதைக்களத்தில் உருவாகியுள்ள இப்படத்தின் டிரெய்லரில் இடம்பெற்றுள்ள வன்முறை மற்றும் ரத்தம் தெறிக்கும் காட்சிகள் ரசிகர்களிடையே பேசுபொருளாக மாறியுள்ளன. இதனால், படத்திற்கு 'ஏ' சான்றிதழ் கிடைக்க வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகிறது.

ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருந்த நிலையில், 'டிசி' திரைப்படம் வருகிற ஜூலை 31ஆம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகும் என்று படக்குழு அறிவித்துள்ளது. நடிகராக லோகேஷ் கனகராஜின் முழுநீள கதாபாத்திரம் எப்படி இருக்கும் என்ற எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் அதிகரித்துள்ளது.

# எதிர்பார்த்ததை விட சிறப்பாக.. ஜெயிலர் 2ல் ஹிருத்திக் ரோஷனின் கேமியோ

நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிப்பில் 2023ஆம் ஆண்டு வெளியான 'ஜெயிலர்' திரைப்படம் ரசிகர்களிடையே மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றது. சன் பிக்சர்ஸ் தயாரிப்பில் வெளியான இப்படம் உலகம் முழுவதும் ரூ.600 கோடிக்கும் மேல் வசூலித்து சாதனை படைத்தது. ரம்யா கிருஷ்ணன், மிர்ணா, விநாயகன், வசந்த் ரவி உள்ளிட்டோர் நடித்திருந்த இப்படத்திற்கு அனிருத் இசையமைத்திருந்தார்.

முதல் பாகத்தின் மாபெரும் வெற்றியைத் தொடர்ந்து தற்போது 'ஜெயிலர் 2' திரைப்படம் உருவாகி வருகிறது. ரஜினிகாந்த் நெல்சன் கூட்டணி மீண்டும் இணைந்துள்ளதால், படத்தின் மீதான எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் அதிகரித்துள்ளது. முதல் பாகத்தைப் போலவே, இந்தப் படத்திலும் மோகன்லால் மற்றும் சிவராஜ்குமார் சிறப்பு தோற்றங்களில் (கேமியோ) நடித்து வருவதாகக் கூறப்படுகிறது. அவர்களுடன் ரம்யா கிருஷ்ணன், பாலிவுட் நடிகர் மிதுன் சக்கரவர்த்தி, சந்தானம், சுராஜ் வெஞ்சரமூடு, யோகி பாபு உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். தற்போது படத்தின் இறுதிக்கட்ட படப்பிடிப்பு பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில், 'ஜெயிலர் 2' படத்தில் பாலிவுட் நடிகர் ஹிருத்திக் ரோஷன் சிறப்பு தோற்றத்தில் நடித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அவரது கேமியோ காட்சிகள் எதிர்பார்த்ததை விட மிகவும் சிறப்பாக வந்திருப்பதால், படத்தில் அவரது திரைநேரம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதன் காரணமாக, படத்தின் மொத்த நீளத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் மற்றொரு கேமியோ கதாபாத்திரத்தில் நடித்துள்ளதாக கூறப்படும் நடிகர் விஜய் சேதுபதியின் சில காட்சிகள் குறைக்கப்படலாம் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும், இதுகுறித்து படக்குழு சார்பில் இதுவரை எந்த அதிகாரப்பூர்வ அறிவிப்பும் வெளியாகவில்லை. முன்னதாக, படம் செப்டம்பர் 3ஆம் தேதி வெளியாகும் என தகவல் வெளியான நிலையில், தற்போது தீபாவளியை முன்னிட்டு நவம்பர் 8ஆம் தேதி வெளியிடுவது குறித்து படக்குழு ஆலோசித்து வருவதாகவும் கூறப்படுகிறது. குறிப்பாக, ஹிருத்திக் ரோஷன் கடந்த 1986ஆம் ஆண்டு வெளியான 'பகவான் தாதா' இந்தி திரைப்படத்தில் குழந்தை நட்சத்திரமாக ரஜினிகாந்துடன் இணைந்து நடித்திருந்தார். பல ஆண்டுகளுக்குப் பிறகு இருவரும் மீண்டும் ஒரே படத்தில் இணைவதாக வெளியாகியுள்ள தகவல் ரசிகர்களின் எதிர்பார்ப்பை மேலும் அதிகரித்துள்ளது.

# உலகக்கோப்பை கால்பந்து: இங்கிலாந்துக்கு எதிரான போட்டியின் முதல் பாதியில் காங்கோ முன்னிலை



உலகக்கோப்பை கால்பந்து தொடரில் இங்கிலாந்துக்கு எதிரான போட்டியின் முதல் பாதியில் காங்கோ முன்னிலை பெற்றுள்ளது.

பிபா உலகக்கோப்பை கால்பந்து போட்டிதொடரில்லீக்சுற்றுஆட்டங்கள் முடிந்து 2வது சுற்று ஆட்டங்கள் பரபரப்பாகநடந்துவருகின்றன. இதில், இரவு 9.30 மணியளவில் நடந்த 2வது சுற்று ஆட்டம் ஒன்றில் காங்கோ மற்றும் இங்கிலாந்து அணிகள் விளையாடின.

அமெரிக்காவின் ஜார்ஜியா மாகாணத்தில் அட்லாண்டா மைதானத்தில் நடந்த இந்த போட்டி தொடங்கிய 7வது நிமிடத்தில் முதல் கோல் அடிக்கப்பட்டது. காங்கோ அணியின் வீரர் பிரையன் சிபெங்கா, இங்கிலாந்து வீரர்களிடம் சிக்காமல் எளிதில் கடந்து சென்று அதிரடியாக முதல் கோலை போட்டு ஆட்டத்தின் விறுவிறுப்பை கூட்டினார்.

எனினும், அதன்பின்னர் இரு அணிகளின் தரப்பிலும் கோல் எதுவும் அடிக்கப்படவில்லை. இதனால், போட்டியின் முதல் பாதியில் 01 என காங்கோ முன்னிலை பெற்றுள்ளது.

இதேபோன்று போட்டியின் முதல் பாதியில் இரு அணிகளுக்கும் தலா ஒரு முறை மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்டது.

# முதல் டி20: இங்கிலாந்துக்கு 190 ரன்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது இந்தியா



முதல் டி20 போட்டியில் இங்கிலாந்து அணிக்கு 190ரன்களைவெற்றி இலக்காகஇந்தியாநிர்ணயித்து உள்ளது.

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஐந்து டி20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடுகிறது. இந்த நிலையில் இந்தியா இங்கிலாந்து இடையிலான முதல் டி20 போட்டி செஸ்டர்லீஸ்ட்ரீட்டில் தொடங்கியது.

இதில் டாஸ் வென்ற இந்திய அணியின் கேப்டன் ஷ்ரேயாஸ் அய்யர் பேட்டிங்கை தேர்வு செய்ததும், இந்திய அணி முதலில் விளையாடியது. தொடக்க ஆட்டக்காரர்களில் சஞ்சு சாம்சன் 1 ரன்னில் வெளியேறி ரசிகர்களுக்கு அதிர்ச்சி ஏற்படுத்தினார்.

ஆனால் அபிஷேக் சர்மா அரைசதம் (59) விளாசினார். கேப்டன் ஷ்ரேயாஸ் அய்யர் மற்றொரு அரைசதம் (68) விளாசினார். இதனால், அணியின் ஸ்கோர் மளமளவென உயர்ந்தது. முன்னணி வீரரான இஷான் கிஷன் ரன் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்து உள்ளார். திலக் வர்மா (13), ஹர்ஷித் ராணா (0), அக்சர் பட்டேல் (3) ரன்களில் ஆட்டமிழந்தனர்.

ஆட்டம் இறுதியில், ஷிவம் துபே (42) ஆட்டமிழக்காமல் உள்ளார். 20 ஓவர்கள் முடிவில் இந்தியா 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 189 ரன்கள் எடுத்துள்ளது. இதனால், இங்கிலாந்து அணிக்கு 190 ரன்கள் என்ற வலுவான ஸ்கோரை வெற்றி இலக்காக இந்தியா நிர்ணயித்து உள்ளது. இங்கிலாந்து அணியின் சாகிப் மஹ்மூத் 3 விக்கெட்டுகளும், அடில் ரஷீத் ஒரு விக்கெட்டும் வீழ்த்தி உள்ளனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.